
செம்மணி
நிலம் 3 துகள் 149 வள்ளுவர் ஆண்டு 2052,  27 வைகாசி - 26 ஆனி 2023 வாரமலர் பக்கங்கள் 18



# வடக்கிலும் விளையும் பணம்...!

**ரவீந்திர தேவன்**

கறுவாவைப் பணப் பயிர் என்கிறார்கள். கறுவாச் செய்கையால் இலங்கை ஈட்டும் வருமானம் அதிகமாக இருப்பதால்தான் கறுவா பணப் பயிராகியது. இந்த நிலையில், கடந்த 20.5.2023 அன்று வட்டுக்கோட்டை பன்குரு முருகன் ஆலய சனசமூக நிலையத்தில் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பொறியியலாளரான புவனகுமார் தலைமையில் வடக்குமாகணக் கறுவாச் செய்கைக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று நடந்தது. 200பேர்வரை அதில் கலந்துகொண்டார்கள். கறுவா ஒரு பணப்பயிர் என்பதும் அதன் மூலம் அதிகூடிய லாபத்தைப் பெற முடியும் என்பதையும் இந்தப் பயிற்சிப் பட்டறையின் மூலம் அறிவித்தார்கள். இலங்கைக்கேயுரிய பூர்வீகப் பயிரான கறுவா காலி, ஹிக்கடுவ, பெந்தோட்ட, பூசா ஆகிய பகுதிகளில் மாத்திரமே வளரக்கூடியது என்ற நிலையே இதுவரை இருக்கிறது. அது மாறி வடக்கு மாகாணத்தின் 5மாவட்டங்களிலும் ஆங்காங்கே விவசாயிகள் பலர் ஆங்காங்கே கறுவா மரங்களை நாட்டிப் பயன்பெற்றுள்ளனர். வடக்கு மாகாணத்திலும் கறுவாவை வளர்க்க முடியும் என்பதை இதன்பின்னர்தான் கறுவா ஆராய்ச்சி நிலையம்கூட அறிந்திருக்கிறது. இதனால் வடக்கிலும் பணப்பயிரான கறுவா விளையும் என்று ஆராய்ச்சி நிலையக்காரருக்கு மாத்திரமல்ல மக்களுக்கும் தெரியவந்திருக்கிறது.

**பயிற்சிப் பட்டறை**

வட்டுக்கோட்டை பன்குரு முருகன் கோவில் சனசமூக நிலையத்தில் நடந்த பயிற்சிப் பட்டறையில் கறுவாக் கன்றுகளை எவ்வாறு நாட்டுவது, அவற்றை எவ்வாறு பராமரிப்பது, கறுவாப் பட்டைகளை எவ்வாறு உரிப்பது, பதப்படுத்துவது, கறுவாவை வைத்து எத்தகைய பெறுமதி சேர் பொருள்களைத் தயாரிப்பது போன்ற பல்வேறு விடயங்கள் விளங்கப்படுத்தப்பட்டன. கறுவாப் பயிற்செய்கையில் ஈடுபடுகின்ற தென்பகுதியைச் சேர்ந்த விவசாயிகளை அழைத்து வந்து செயன்முறை ரீதியாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

> கறுவா ஒரு பணப்பயிர். இதன் மூலம் அதிக வருமானத்தைப் பெறமுடியும் என்கிறீர்கள். இப்படியான ஒரு நல்ல விவசாய முறையை இலங்கை சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் கடந்த பின்னர்தானே எங்களுக்கு அறிமுகப்படுத்துகிறீர்கள்

**75ஆண்டுகளாக ஏன் சொல்லவில்லை...?**

வட்டுக்கோட்டைப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட வயதான விவசாயி ஒருவர் கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான பணிப்பாளர் கலாநிதி ஜி.ஜி.

ஜெயசிங்கவிடம் சிந்திக்கத்தக்க கேள்வி ஒன்றை எழுப்பினார். கறுவா ஒரு பணப்பயிர். இதன் மூலம் அதிக வருமானத்தைப் பெறமுடியும் என்கிறீர்கள். இப்படியான ஒரு நல்ல விவசாய முறையை இலங்கை சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் கடந்த பின்னர்தானே எங்களுக்கு அறிமுகப்படுத்துகிறீர்கள்...? இதை முன்னரே செய்திருந்தால் நாங்கள் இன்று அதிக வருமானத்தைப் பெற்றிருப்போமே? என்று கவலையுடன் கேட்டார்.
அதற்குப் பணிப்பாளர் ஜெயசிங்கவிடம் தக்க பதில் இருக்கவில்லை. நாட்டுப் பிரச்சினை மற்றும் ஏனைய காரணங்களையே அவரால் பதிலாகக் கூறவேண்டியிருந்தது. ஆனால் இது விடயத்தில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தை மாத்திரம் குறைகூற முடியாது. இது குறித்த எந்த அறிவோ, மக்கள் பயன்பெறக்கூடிய விடயங்களை அறிமுகப்படுத்தவேண்டும் என்ற எண்ணமோ தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இப்போதுவரை இல்லை.

**பூவரசு வளருமிடத்தில் கறுவாவும் வளரும்**

யாழ்ப்பாணம் - மல்லாகம் பகுதியில் பத்து வருடங்களுக்கு மேலாகக் கறுவாச் செய்கையில் ஈடுபட்டு வரும் ஒருவர் இதுகுறித்து அந்தப் பயிற்சிப் பட்டறையில் கருத்துத் தெரிவிக்கையில், எனது அவதானிப்பில் எனது கறுவா மரங்கள் வருடா வருடம் மாசி, பங்குனி மாதங்களில் பூத்துக் காய்க்கின்றன. அதை வைத்து இந்தச் சூழலுக்குக் கறுவா மரங்கள் இசைவாகியுள்ளதை அறிய முடிகிறது. அதேவேளை யாழ்ப்பாணத்தில் அநேகமான இடங்களில் வேலிகளில் பூவரசுகள் நின்றன. தற்போது மதில்கள் அமைப்பதற்காக அவை பெருமளவில் வெட்டப்பட்டு விட்டன. ஏறத்தாழ பூவரசை ஒத்த வறள் தாவரமே கறுவாவும். எனவே பூவரசு வளரும் இடங்களில் எல் லாம் கறுவா மரங்களும் வளரும் என்று நினைக்கிறேன் - எனத் தனது அவதானிப்பைப் பகிர்ந்தார்.



**வடக்கில் முன்னெடுக்கப்படும் முயற்சிகள்**

வடக்கு மாகாணத்தில் கறுவாச் செய்கைக்கான முயற்சிகள் இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. 5-50ஏக்கர் வரையான பெரிய காணிகளில் நாட்டுவதற்கான முன்னெடுப்புகளும் அரை ஏக்கரில் இருந்து 5ஏக்கருக்குக் குறைவான நிலங்களில் நாட்டுவதற்கான முன்னெடுப்புகளும் என இரண்டு வகைத் திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன. இதில் பெரிய காணிகளில் பயிரிட முனைந்திருப்பது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் முதலீடாகக்




காணப்படுகிறது. சிறிய நிலத்தில் கறுவா பயிரிடுபவர்கள் உள்நாட்டு விவசாயிகள். இவ்விரு முயற்சியாளர்களும் தாம் உற்பத்தி செய்யும் கறுவாப்பட்டகைளை தனிப்பட்ட முறையிலும் கறுவா ஏற்றுமதிச் சபை மூலமும் விற்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.
சிறிய நிலப்பரப்பில் சிறிய விவசாய முயற்சியாகக் கறுவாவைச் செய்கை பண்ணுபவர்கள் தமது கறுவாப் பட்டைகளை வெட்டிக் கறுவா பதனிடும் மையங்களுக்கு விற்க முடியும். அல்லது தாமே பதப்படுத்தி உள்ளூர்ச் சந்தைவாய்ப்புகளைப் பெற முடியும். விற்பனையை எந்த வடிவத்தில் மேற்கொண்டாலும் அதிக வருமானத்தைப் பெற வாய்ப்புண்டு.

**கறுவா மரப் பராமரிப்பு**

கறுவாக் கன்றுகளை 3அடி அகலமும் நான்கடி நீளமும் கொண்ட நீள் சதுர இடைவெளியில் நடமுடியும். ஓர் அடி அகல, நீள, ஆழத்தைக் கொண்ட கிடங்கை வெட்டி மாட்டெரு, உமிக்கரி ஆகியவற்றைக் கலந்து கிடங்கை நிரப்பி நீரூற்றிக் கறுவாக் கன்றை நட முடியும். கறுவா வறள் தாவரமாக - காட்டுத் தாவரரமாக இருப்பதால் வாரத்துக்கு இரு தடவைகள் நீர் ஊற்றினால் போதுமானது. முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய காடுகளை அண்டிய சூழலில் கறுவா நன்கு செழித்து வளர்வதற்கு வாய்ப்புண்டு. இது பணப்பயிராக இருப்பதால் இலகுவில் விலை வீழ்ச்சியடையப்போவதில்லை.
தற்போது இலங்கை உற்பத்தி செய்யும் 95வீதமான கறுவாப் பட்டைகளை அமெரிக்காவே கொள்வனவு செய்கிறது. கொக்க கோலா போன்ற பானங்களில் இலங்கைக் கறுவாத் துள்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று அறிய முடிகிறது. வடக்கு மாகாணத்தில் எங்கும் கறுவா வளரும் என்பதைக் கறுவா ஆராய்ச்சி நிலையமோ விவசாயத் திணைக்களமோ கண்டுபிடிக்காத நிலை யில் தனிப்பட்ட விவசாயிகள் பலர் ஆங்காங்கே நாட்டிக் கறுவா வடக்குமாகாணத்தில் செய்கை பண்ணக் கூடிய ஒரு பயிர் என நிரூபித்திருக்கிறார்கள். இவ்வாறு இலை மறை காயாக இருந்தவர்களைச் சமூக வலைத்தளச் செயற் பாட்டாளர்கள் பலர் வெளிக்கொண்டு வந்திருக் கிறார்கள். வடக்குமாகாணத்தில் பணப்பயிரான கறுவா விளையும் என்று தெரியவந்திருக்கது நலிவ டைந்துள்ள வடக்கு மக்களுக்குப் பெரியதொரு வரப் பிரசாதமே. இது மக்களை மாத்திரமன்றி நலிவடந்திருக்கிற வட மாகாண விவசாயத்துறையை சக்திமிக்கதாக மாற்று வதற்கும் வழிவகுக்கும்.

# தையிட்டி விகாரை தமிழ்ப் பௌத்தர்களுக்கே...!

நாகராசா



பொகவந்தலாவ ராகுல தேரர் அண்மையில் யாழ்ப்பாணத் தொலைக்காட்சி ஒன்றுக்குச் செவ்வியளித்திருந்தார். அந்தச் செவ்வியில் ஒரு விடயத்தை அவர் நுட்பமாகக் கூறினார். தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள புத்த விகாரை சிங்களவர் வாழாத ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருக்கிறது என்று பலர் குற்றம் சாட்டியுள்ளனர். அது ஒரு தவறான கருத்தாகும். பௌத்தம் சிங்களவருக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. தையிட்டி விகாரையானது தமிழ் பௌத்தர்கள் வணங்குவதற்காக அமைக்கப்பட்டது. தமிழ்ப் பௌத்தர்களின் அமைப்பு ஒன்றிடம் அந்த விகாரை கையளிக்கப்படவிருக்கிறது. அருகிலுள்ள தமிழ் மக்களின் காணிகள் அவர்களிடமே கையளிக்கப்படும். இதுவிடயத்தில் யாரும் அச்சம்கொள்ளத் தேவையில்லை - என்று குறிப்பிட்டார்.

**தமிழ் பௌத்தர்கள் யார்...?**

பொகவந்தலாவ ராகுல தேரர் குறிப்பிடும் தமிழ் பௌத்தர்கள் எங்கிருக்கிறார்கள்...? சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் (1970களில்) பௌத்த மாநாடு ஒன்று கொழும்பில் நடந்தது. 50க்கு மேற்பட்ட தமிழ்ப் பௌத்தர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்று அந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள். இதைவிட ஜெ.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன் சோ.நடராஜன் பௌத்த துறவியாக மாறியிருந்தார். அவர் யாழ்ப்பாணத்து தர்மரத்ன தேரர் என்ற பெயருடன் காவியுடை தரித்து அப்போதைய அரச தலைவர் ஜெ.ஆர்.ஜெயவர்த்தனாவைச் சந்தித்ததை ரூபவாகினி தொலைக்காட்சியில் காண்பித்தார்கள். அவரைத் தவிரத் தமிழ்மக்கள் பெருமளவில் பௌத்தத்துக்கு மாறியதாகவோ தனியான விகாரை ஒன்றைக் கட்டி வணக்கம் செலுத்தியதாகவோ 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 21ஆம் நூற்றாண்டிலோ ஆதாரதங்கள் எவையும் இல்லை. அதனால் பொகவந்தலாவ ராகுல தேரர் குறிப்பிடும் தமிழ்ப் பௌத்தர்கள் இனிமேல்தான் உருவாக்கப்படப் போகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. தேரரின் செவ்வியில் புத்த விகாரை சிங்களவருக்கு மட்டும் சொந்தமானதல்ல தமிழர்களும் முஸ்லிம்களும் கூட அங்கு செல்ல முடியும். அவர்களுக்குத் தேவையான வற்றை அங்கு பெற முடியும். இது அனைத்து மக்களுக்கும் பொதுவானது - என்றும் கூறினார்.

அவரது கூற்றின்படி அந்த விகாரை மூலம் இனிப் பல்வேறு பொதுப்பணிகள் மேற்கொள்ப்படவிருக்கின்றன என்பதும் மக்கள் கவரப்படவிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. இவ்வாறு தமிழ் மக்கள் நன்மை அடைவதற்காகக் கட்டப்பட்ட விகாரையை செல்வராஜா கஜேந்திரன் போன்றவர்கள் குழப்புகிறார்கள் என்ற செய்தியையே தேரர் வெளியுலகுக்குக் காட்ட முனைகிறார் என்றும் தெரிகிறது. தேரரின் கூற்றுப்படி தமிழ்ப் பௌத்தம் என்கிற புதிய வியூகம் மதரீதியாக வடக்குக் கிழக்கில் பரப்புவதற்கு வகுக்கப்படுவது தெரிகிறது. எதிர்காலத்தில் விகாரையின் அருகே ஒரு தமிழ்ப் பௌத்த குடும்பத்தை உருவாக்கி அவர்கள் வணங்குவதற்கு விகாரை ஒன்று தேவையல்லவா? என்ற குதர்க்கமான வாதங்கள்கூட எதிர்காலத்தில் உருவாக வாய்ப்புண்டு. எல்லாவற்றையும்விட ராகுல தேரர் தூய தமிழில் யாழ்ப்பாணத் தொலைக்காட்சிச் சேவைக்குச் செவ்வியளித்திருப்பதும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. இது திட்டமிடப்பட்ட சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் மற்றொரு பாய்ச்சலாகவே எதிர்காலத்தில் இருக்கப்போகிறது என்பது மட்டும் உறுதி.

**தமிழ்ப் பௌத்தர்களின் அமைப்பு ஒன்றிடம் அந்த விகாரை கையளிக்கப்படவிருக்கிறது. அருகிலுள்ள தமிழ் மக்களின் காணிகள் அவர்களிடமே கையளிக்கப்படும். இதுவிடயத்தில் யாரும் அச்சம்கொள்ளத் தேவையில்லை**



தர்மராசா

சிறைக்குள்...

110

# கைவினைப் பொருள்களைச் செய்வதில் வல்லவர்கள்...!

களுத்துறை, பூசா ஆகிய சிறைகளில் பற்தூரிகைகள், பேனைகள், லைற்றர்கள், பிளாஸ்ரிக் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கைதிகள் அழகிய பேனைகள், வானூர்திகள் போன்ற விளையாட்டுப் பொருள்களைச் செய்து விற்பார்கள். ஒரு அழகிய பேனை செய்வதற்கு 250ரூபா, வானூர்தி செய்வதற்கு ஆயிரம் தொடக்கம் ஆயிரத்து500ரூபா வரை செலவாகும். சிலர் சயனைற் குப்பி போன்ற பொருளைச் செய்து அதற்குள் ஆங்கில எழுத்துக்களை வெட்டித் தமது பெயரை வைத்து அதற்குள் தேங்காய் எண்ணை விட்டுக் கழுத்தில் தொங்கவிடுவார்கள். சிலர் இவ்வாறான பொருள்களைச் செய்வதில் கைதேர்ந்தவர்களாயிருந்தனர். பூசாவில் விமல், கண்ணன், கட்சன், றிகாஸ் ஆகியோர் இதில் சிறந்து விளங்கினர். களுத்துறையில் ஜெயபால் என்ற பெயரில் இருவர் இருந்தனர். சிறி, ராஜா என்று இருவர் இருந்தனர். இவர்கள் சிறைச்சாலையில் எனக்குத் தெரிந்த சிறந்த கைவினைஞர்கள். நான் இருக்காத வார்ட்டுகளில் இவர்களைப்போவ மேலும் பல கைவினைஞர்கள் இருந்தனர் என்று அறிந்தேன்.

ராஜ என்பவர் பீ.வி.சி. குழாய்கள், பற்தூரிகைகளைப் பொருத்தி வானூத்தி ஒன்றைச் செய்திருந்தார். அமெரிக்கப் போர் வானூர்தி மாதிரியை வைத்து அதைச் செய்தார். 3 மாதங்களாக அதைச் செய்துகொண்டிருந்தேன் என்று என்னிடம் கூறினார். அதன் பின்னர் தமிழீழ வான் படை என (ரி.இ.எயார் போர்ஸ்) என்று பெயரிட்டு இன்னொரு வானூர்தியைச் செய்துகொண்டிருந்தார். அதைச் செய்வதற்காக 45 பற்தூரிகைகளைச் சிறைச்சாலையில் பொருள்கள் வாங்கும்போது (மணி ஓடர் காசில்) வாங்கியிருந்தார். அப்போது பற்தூரிகை

# “புரியாணி சமைத்துத் தந்த புலி”



கடற்படையின் சாஹர கப்பலின் முதலாவது கட்டளையிடும் அதிகாரியாக முன்னாள் கடற்படைத் தளபதி சின்னையா இருந்தார். அதன் இரண்டாவது கட்டளையிடும் அதிகாரியாக நான் இருந்தேன். கடற்படைத் தளபதி சின்னையாவுக்குத் தமிழில் ஒரு சொல் கூடப் பேசத் தெரியாது. சிங்களமும் ஆங்கிலமும் மாத்திரமே பேசுவார். எமது இணைந்த செயற்பாட்டின் மூலமே புலிகளின் 6 கப்பல்களைப் பன்னாட்டுக் கடலில் வைத்துத் தாக்கி அழித்தோம். அந்த வரிசையில் புலிகளின் முதலாவது கப்பலை அழிப்பதற்காக இலங்கைக் கடற்பரப்பில் இருந்து 5 நாள்கள் பயணம் செய்து அதைத் தேடித் தாக்கி அழித்தோம். பின்னர் மீண்டும் 5 நாள்கள் பயணித்து இலங்கைக்கு வந்தோம். இந்தத் தாக்குதலின்போது கடலில் மிதந்த 3 ஆயுதங்களை நாங்கள் எடுத்தோம்.

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

**இந்தோனேசியாவிலிருந்து ஆயுதக் கடத்தல்**

இந்தோனேசியாவிலிருந்து அரச சார்பற்ற வகையில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் வாய்ப்புப் புலிகளுக்கு இருந்தது. புலிகளிடம் ஆயுதங்களை ஏற்றக்கூடிய பெரிய கப்பல்கள் 7 இருந்தன. அதில் ஒன்றை ஏற்கனவே நாம் அழித்துவிட்டதால் 6

ஒன்றின் விலை 25ரூபா. இதை வைத்துப் பார்க்கும்போது கைவினைப் பொருள்களைக் கைதிகள் மிகப் பெரிய முதலீட்டுடன் செய்வதைக் காணமுடிந்தது.

மட்டக்களப்புச் சிறையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சத்தியன் என்ற கைதி ஒருவர் சிவில் வழக்கு ஒன்றுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவருக்குக் கொழும்பு நீதிமன்றில் பண மோசடி வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டிருந்தது. தன்னை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி என்று சொன்னார். புதிதாக வருகிற கைதிகளை விசாரித்து, அவர்களது வழக்கு விவரங்களைக் கேட்டுவிட்டு இதெல்லாம் சின்ன விசயம், உனக்கு மூளைக்கோளாறு என்று சிறை மருத்துவர் உறுதிப்படுத்தி ஒரு கடிதம் நீதிபதிக்கு அனுப்பினால் உந்தச் சிக்கலில் இருந்து விடுவிக்கப்படுவாய், அந்த மருத்துவ அறிக்கையை (மெடிக்கல் றிப்போட்) மிக இரகசியமாக எடுக்க வேண்டும். சிறை மருத்துவமனையில் பணிபுரியும் ஆண் மருத்துவத் தாதி ஊடாக மருத்துவருக்குக் காசு கொடுத்து இதைச் செய்து தருவேன். அதற்கு ஆயிரம் ரூபா தேவை. இது பற்றி வேறு யாரிடமும் சொல்லக்கூடாது. என்றுசொல்லிக் கைதிகள் பலரிடம் இரகசியமாகப் பணம் பெற்றிருந்தார். இந்த விடயம் தெரியவந்தபோது அரசியல் கைதிகளாக இருந்த பலர் அவருக்கு அடிக்கப் போயினர். அவர்களைச் சமாளித்துக் கைதிகளிடம் வாங்கிய பணத்தைத் திரும்பக் கொடுக்க ஒழுங்கு செய்து பலரது பணத்தைத் திரும்பப் பெற உதவினேன். யாராவது சிஙயிலிருந்து விடுதலையானால் அவர்களது விடுதலைக்குக் காரணம் தான் இரகசியமாகச் செய்துகொடுத்த மருத்துவ அறிக்கைதான் என்று சொல்லிவிடுவார். எல்லா விடயங்களிலும் பொய் சொல்வது அவருடைய இயல்பாக இருந்தது. சுருங்கச் சொன்னால் அவர் ஒரு பொய் மலை. அத்தோடு அவருக்கு வழக்கை முடித்து வெளியில் போகும் நோக்கம் இருக்கவில்லை. உள்ளே இருந்துகொண்டு ஏதாவது சுத்துமாத்துப் பண்ணிச் சீவிப்பதுதான் நோக்கமாக இருந்தது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பதால் சிறைச்சாலைக்குள் பணிபுரியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊழியர்களைத் தனக்குத் தெரியும் என்று சொல்லிக்கொள்வார். இனிமேல் யாராவது சிறைக்குள் போகவேண்டிய நிலை ஏற்பட்டால் இவ்வாறான நபர்களிடம் சற்று உஷாராக இருக்க வேண்டும்.



கப்பல்களே எஞ்சியிருந்தன. புலிகள் அந்தப் பெரிய கப்பல்களில் கொண்டுவரும் ஆயுதங்களை 40இலிருந்து 50 நோட்டிக்கல் கடல் மைல் தொலைவில் வைத்துச் சிறிய படகுகளுக்கு மாற்றுவார்கள். அந்தச் சிறிய படகுகள் கரையிலிருந்து செல்லாதபடி கடற்படையினர் 24 மணிநேரங்களும் கண்காணிப்பிலிருந்தபோதும் சிறிய படகுகள் திடீரெனக் கடலில் இருந்து கரைக்கு வருவதைக் கண்டோம். பின்னர்தான் தெரியவந்தது அந்தப் படகுகள் கரையிலிருந்து செல்லவில்லை என்பதும் புலிகள் தமது பெரிய கப்பல்களிலேயே அந்தப் படகுகளையும் ஏற்றி வந்து அவற்றைக் கடலில் இறக்கியபின் அவற்றில் ஆயுதங்களை ஏற்றுகிறார்கள் என்று.

2007ஆம் ஆண்டு மாசி மாதம் 28ஆம் திகதி புலிகளின் கியோய் என்ற ஆயுதக் கப்பலைத் தாக்கி அழித்தோம். இந்தக் கப்பலை 800 மீற்றர் தூரம் வரை அண்மித்துச் சென்று சிறிய ரக ஆயுதங்களால் தாக்கினோம். இதன்போது புலிகள் இருவர் கடலில் குதித்ததை அவதானித்து அவர்களைச் சிறைப்பிடித்து எமது கப்பலில் ஏற்றினோம். தமது உயிர்மேல் ஆசை இருந்ததாலேயே அவர்கள் கடலில் குதித்தார்கள். அதனால்தான் அவர்களைக் காப்பற்றினோம். அதில் ஒருவர் மாலுமி, மற்றவர் சமையற்காரர். கப்பலைத் தாக்கி அழித்த பின்னர் காப்பாற்றிய இருவரும் 5 நாள்கள் எம்முடன் பயணம் செய்தே இலங்கைக்கு வரவேண்டியிருந்தது. அந்தப் பயணத்தின்போது அவர்கள் இருவரும் மிகவும் சாதாரணமாக எங்களுடன் பழகினார்கள்.

**சுவையான புரியாணிச் சாப்பாடு**

சமையற்காரனான புலி உறுப்பினர் கப்பலில் பணிபுரியும் எங்கள் அனைவருக்கும் ஒருநாள் புரியாணி சமைத்துத் தந்தார். எனது வாழ்நாளில் அப்படி ஒரு சுவையான புரியாணியை ஒருபோதும் சாப்பிட்டதில்லை. இலங்கையை வந்தடைந்ததும் அவர்கள் இருவரையும் கடற்படைத் தலைமையகத்தில் ஒப்படைத்தோம். அதன் பின்னர் அவர்கள் இருவரும் இலங்கைக் கடற்படையில் பணி புரிந்தனர் என்று அறிந்தேன். நான் தொடர்ந்தும் கடலில் பணியாற்றியதால் அதன் பின்னர் அவர்களைக் காணச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.



**ஒரே கடற்பகுதியில் பல கப்பல்களையும் அழித்தோம்**

புலிகளின் 6 கப்பல்களை இந்தோனேசியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான ஆழமான கடற்பகுதியில் வைத்துத் தாக்கி அழித்தோம். எமக்கு ஏற்கனவே கிடைக்கப்பெற்ற தகவல்களை வைத்து நைற் விசன் கண்ணாடி மூலம் இரவில் கப்பல்களை அவதானித்துக் கொண்டிருப்போம். கப்பலின் பெயர், அதில் பறக்கும் கொடி என்பவற்றை வைத்துப் புலிகளின் கப்பல்தானா அது என்பதை உறுதிப்படுத்திவிடுவோம். எமது கப்பலைக் கடற்படைக் கப்பல்போல இல்லாமல் பெரிய மீன்பிடிக் கப்பல்போல காட்டிக்கொள்வோம்.

**தமிழில் இல்லை என்றார்கள்**

கடலில் தென்படும் கப்பலை நாம் உறுதிப்படுத்துவதற்காக அந்தக் கப்பலுடன் தொலைத் தொடர்புக் கருவி மூலம் தொடர்பை ஏற்படுத்துவோம். அவ்வாறு புலிகளின் கப்பல் ஒன்றைத் தொடர்புகொண்டு ஆங்கில மொழியில்



உரையாடிக் கொண்டிருந்தபோது அவர்கள் ஆயுதங்களைக் கடலுக்குள் போடுவதைக் கண்டோம். நீங்கள் புலிகள் தானே? இது ஆயுதக் கப்பல் தானே? என்று கேட்டபோது தொலைத் தொடர்புக் கருவியில் கதைத்தவர் பதற்றத்தில் இல்லை என்று தமிழில் கூறினார். அதை வைத்தே அது புலிகளின் கப்பல்தான் என்பதை உறுதிப்படுத்தித் தாக்கி அழித்தோம். புலிகளின் கப்பல் எனச் சந்தேகித்து வேறு கப்பல்களைத் தாக்கி அழித்தால் அதற்கான நட்டத்தை இலங்கை அரசு செலுத்தவேண்டியிருக்கும்.

**துல்லியமான இரகசியத் தகவல்கள்**

புலிகளின் கப்பல்கள் ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு இந்தோனேசியாவிலிருந்து புறப்படும் போதே அந்தக் கப்பலில் எத்தனைபேர் பயணம் செய்கிறார்கள்? எத்தகைய ஆயுதங்கள் ஏற்றப்பட்டுள்ளன? என்ன வகையான

கொடி அதில் பறக்கவிடப்பட்டுள்ளது? கப்பலின் நீள, அகலம்? அதன் இயந்திர சக்தியின் அளவு எல்லாமே எமக்குத் தெரிவிக்கப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் நாம் தொலைத் தொடர்புக் கருவி மூலம் புலிகளின் கப்பலாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தும்போதே அவர்கள் அதை விளங்கிக் கொண்டு தொலைத் தொடர்புக் கருவியைத் துண்டித்து விடுவார்கள். அதை வைத்தும் அது புலிகளின் கப்பல்தான் என உறுதி செய்துவிட முடிந்தது. நாம் கப்பல் குறித்துத் தொலைத் தொர்புக் கருவியில் தொடர்புகொண்டு வினாவினால் புலிகள் ஒருபோதும் தாங்கள் யார் என்பதைக் காட்டிக்கொள்ள மாட்டார்கள். புலிகளின் ஆயுத வழங்கல் கப்பல்களை நாங்கள் தொடர்ந்தும் தாக்கி அழித்ததால் போர் புரிவதற்கான ஆயுதங்கள் புலிகளுக்கு இல்லாது போயிற்று.

(தொடரும்)

---

# கறுப்பு விலங்கு மீதான காதல்

எட்வின் றூஸ்




இறைச்சிப் பிரியர்களின் தெரிவாகக் கறுப்பு நிற விலங்குகள் இருக்கின்றன. கறுப்பு நிற விலங்குகளுக்கு இதனால் அதிக மவுசு இருக்கிறது. கறுப்பு நிறக் கிடாய் நல்ல விலைபோவதையும் ஏனைய நிறக் கிடாய்கள் அவ்வாறில்லாமலிருப்பதையும் பல இடங்களில் அவதானித்திருப்பீர்கள். கிடாய் ஆடுகளுக்கு மத்திரம் இந்த மவுசு இருப்பதில்லை. கறுப்பு நிறத்திலுள்ள சேவல்கள் ஆகட்டும், காளை மாடுகள் ஆகட்டும் எல்லாமும் ஏனைய நிறத்தில் இருப்பதைவிட கறுப்பில் இருந்தால் இறைச்சிப் பிரியர்கள் மத்தியில் அதிக கேள்வியை ஏற்படுத்திவிடுகின்றன. எதுஎப்படியிருப்பினும் இவ்வாறாகக் கறுப்பு விலங்கிறைச்சி மீது மனிதர்களுக்கு அதிக விருப்பு இருப்பது உண்மைதான்.

**கறுப்பு நிறத்தால் உண்டான ருசி**

விலங்குகளின் தோல் பகுதி (உரோமம், இறக்கைகள்) கறுப்பு நிறத்தில் காணப்படுவதால் கறுப்பு நிறத்துக்குரிய வெப்பத்தை உள்ளீர்க்கும் பண்பு இயல்பானதாகக் காணப்படுகிறது. இதனால் அதிக வெப்பநிலையைத் தாங்கிக் கொள்வதற்காக நீர் அருந்துதல் மற்றும் உணவை உள்ளெடுத்தல் ஆகிய பண்புகளை இயற்கையாகவே ஏனைய விலங்குகளில் இருந்து மாறுதல்களுடன் குறித்த நிற விலங்குகள் உள்ளீர்க்கின்றன. அதைவிட வெப்பத்தைத் தாங்கும் வலிமை, வீரியம் ஆகியன குறித்த உடலில் சிறப்பாகக் கட்டமைக்கப்படுகிறது. கறுப்பு நிறத்தைக் கொண்டுள்ளதால் வலிச்சல் மிக்கதாகவும், குருதியோட்டம் மிக்கதாகவும் முறுக்கேறிய தசைகளாலும் உடல் வலுப்பெற்றவையாகக் கறுப்புநிற விலங்குகள் இருக்கின்றன. இது இயற்கையால் உண்டாக்கப்பட்ட மாற்றமாக ஏனைய விலங்குகளில் இருந்து கறுப்புநிற விலங்குகளை வேறுபடுத்துகின்றன.

**ருசி மிக்க கருங்கோழி**

கறுப்பு நிறம் மீதான இறைச்சிப் பிரியர்களின் அவாவைப் பொதுவாக இந்துக் கோவில்களில் அதிகம் காணலாம். இந்துச் கோவில்களில் சேவல்களை ஏலத்தில் விற்கும்போது கறுப்புச் சேவலை வாங்குவதற்கு அதிகம்பேர் முண்டியடிப்பார்கள். அதன்

**இந்தக் கோழி இறைச்சியை உண்டால் ஆண்மைத் தன்மை அதிகரிக்கும், விந்தணு வீரியம் அடையும் என்றெல்லாம் ஆராய்ச்சிகள் மூலம் நிறுவப்பட்டுள்ளன என்கிறார்கள்**

# கதையளாலைதான் நடத்தப்படுகிறமோ?



கதிரேசன் காந்திலராயன்

நேற்றைக்கு சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டுக்குப் போனனான். மாஸ்ரர்தான் பேப்பரோடை இருந்தார். என்னைக் கண்டவர் உற்சாகமாய் 'வாரும்..வாரும் கதிரேசர்... பேப்பரைப் பாக்க விசராக் கிடக்குது...வேறைவழியும் இல்லை ரீவியிலையும் சும்மா அழுகையும் அடிதடியும்தான்' எண்டு கையிலை வைச்சிருந்த பேப்பரை கீழை வைச்சார்.

'பேப்பருகளிலையும் ஒரே செய்தியள்தான்... றேடியோவும் அதுதான் ரீவியும் அதுதான்' எண்டு நான் ஆமோதிச்சுக்கொண்டிருக்க முருகேசரும் கனகரும் வந்தினம். 'வாங்கோ வாங்கோ' எண்டு மாஸ்ரர் உற்சாகமானார். 'என்ன மாஸ்ரர்? காலநிலையும் அப்பிடி நாட்டு நடப்புகளும் அப்பிடி ஒரு விதத்திலையும் ஆறுதல்படவெண்டு ஒண்டுமில்லை' எண்ட கனகர் சலிச்சார்.

'கனகர் சலிக்கிறதிலையும் உண்மையளுங் கிடக்கு...' எண்டு முருகேசர் நிப்பாட்ட 'என்னைய்சே முருகேசர்? நீர் ஒரு நல்ல பழக்கத்தைப் பழகியிருக்கிறீர் கதையை விரும்பிக் கேக்கிறவைக்குத்தான் சொல்லுறது... சும்மா அரசியல் வாதியள் மாதிரி கொட்டிவிடுறேல்லை. என்ன?' எண்டு கேட்டுச் சிரிச்சார் மாஸ்ரர். 'அது உண்மையிலையும் நல்லதுதான்'எண்டம் நானும் கனகரும்.

'உவை எங்கடையாக்கள் பெரியவர் கூ;ப்பிட்டுப் போனவையல்லே?

இறைச்சி சத்தானது, ருசியானது என்றெல்லாம் அவர்கள் மத்தியில் இருக்கிற கருத்துருவாக்கமே இதற்குக் காரணம். கறுப்புச் சேவல்களுக்கு ஏன் அவ்வளவு முக்கியம் கொடுக்கிறார்கள் என்றால், அதற்குப் பின்னால் பல காரணங்கள் உள்ளன.

தற்போதுள்ள நாட்டுக் கோழிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் காட்டில் வாழ்ந்த கோழியைப் பிடித்து வளர்த்து உருவாக்கப்பட்டவையே. இந்தியாவின் மத்திய பிரதேசக் காடுகளில் இருந்த ஒரு வகைக் கருங் கோழிகளைக் கடக்நாத் கோழிகள் என்று அழைக்கின்றனர். காடுகளில் வாழும் இந்தக் கோழிகள் பல்வேறு மூலிகைகளைத் தின்று வளர்வதால் அதன் இறைச்சி பல நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப் படுகிறது. இந்தக் கோழிகளின் இறைச்சியும் கறுப் பாகவே இருக்கும். அதேபோல பிளக் மீற் சிக்கன் என அழைக்கப்படும் ஒரு வகைக் கருங்கோழி இறைச்சி நாட்பட்ட நோய்களையும் நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்களையும் சீர் செய்ய உதவுகின்றன.

இந்தக் கோழி இறைச்சிகளில் 25 வீதம் புரதமும் 0.72 - 1.05 வீதம் வரையில் கொலஸ்ரோலும் காணப் படுகிறது. இந்தக் கோழி இறைச்சியை உண்டால் ஆண்மைத் தன்மை அதிகரிக்கும், விந்தணு வீரியம் அடையும் என்றெல்லாம் ஆராய்ச்சிகள் மூலம் நிறுவப்பட்டுள்ளன என்கிறார்கள். இதனால்தான் இப்போது வரை கறுப்புச் சேவல், கறுப்பு ஆடு, கறுப்புக் காளை போன்றவை ஏனைய வர்ணத்திலுள்ள விலங்குகளை விடச் சிறந்தது என்று நம்மவர்கள் இன்றுவரைச் செவிவழிக் கதையாகக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

அதின்ரை பலனுகள் என்ன? கதைச்சதோடை சரி... என்ன கதைச்சதெண்டதிலை என்னண்டாலும் தெரியுமோ?' எண்டு கனகர் கேக்க 'விசயமெண்டு ஒண்டை வைச்சுக் கதைச்சாலில்லோ இதுதான் கதைச்சது.. இப்பிடித்தான் எண்டேதும் சொல்லலாம்' எண்டு முருகேசர் எரிச்சலாய்ச்சொன்னார்.

'எல்லாவிசயங்களையும் சொன்னால் பேந்து ஒரு திறில் இருக்குமோ? அதோடை எல்லாம் தெரிஞ்சாலும் சுவாரசியம் இருக்காதல்லோ?'எண்டுகொண்டு சுதன் எங்கடை கதைக்குள்ளை சேந்துகொண்டான். 'என் னடாப்பா சுதன் முருகேசரோடை ஏதாலும் டீல்கீல் நடந்திட்டுதோ?' எண்டு நான் கேக்க எல்லாரும் சிரிச்சினம். அந்தநேரம் வழமையாய் வாற சுதனின்ரை கூட்டாளிப் பெடியனொருத்தன் வந்து இருந்து கொண்டான்.

அவன் எங்களைப் பாத்து ஒரு அறிமுகச் சிரிப்பை விட்டுக்கொண்டு 'ஏதோ சீரியஸாப் போய்க் கொண்டிருந்த கதையைக் குழப்பிப்போட்டன் போலை கிடக்குது?' எண்டு தொடங்கினான். 'தம்பி கதையெண்டு வரேக்கை நிக்கத்தான்செய்யும் ஆனால் பொருத்தப்பாடான இடத்திலைதான் நிக்கவேணும்...' எண்டு மாஸ்ரர் சொல்லி முடிக்கயில்லை 'அர்த்தத் தோடை இருக்கிற கதையளைத்தான் பொருத்தம் பொருத்தமில்லை எண்டெல்லாம் பாத்து நிப்பாட்டலாம் ஒத்திவைக்கலாம். அப்பிடியில்லையோ மாஸ்ரர்?' எண்டு நான் கேக்க எல்லாருமே அமைதியாகிவிட்டினம்.

'கதிரேசற்றை கதையிலை ஞாயமிருக்கு... எனி நாங்கள் ஏதாலுமொரு கதையை நிதானமாத் தொடக்கி நிதானமாய் முடிக்கிறதுக்குப் பழக வேணுங்கண்டியளோ... ஒண்டிலும் ஒரு தீர்மானமில்லை..'எண்டு மாஸ்ரர் சொல்ல 'உண்மைதான் சேர் நாங்கள் சீசன் கதையளோடைதான் காலத்தைப் போக்காட்டிறம்..' எண்டான் தயக்கத்தோடை பெடியன்.

'அதுதான்ரா தம்பி...சரியாச் சொன்னீர் இப்ப ஒரு ரண்ட மூண்டு வருசக் கதையளைப் பாருங்கோவன்? கொரோனா எண்டதுக்கு றண்ணிங்கொமென்றி குடுத்து பேந்து அதுக்கு ஊசியெண்டு வந்து அடிபட்டு சரி முடிஞ்சுது எண்டம்...இப்ப அது தன்ரைபாட்டிலை பெருகூது..சாவுகளும் நாங்கள் கதைச்ச காலமளவுக்கில்லைஎண்டாலும்அது இருக்கு..தன்ரை பாட்டிலை...' எண்டு முருகேசர் உற்சாகமானார்.

'பெற்றொல்க்கியூ எண்டிறதிலையும் அதுதான் சோறுபோடுது எண்டமாதிரிக் கதைச்சுத்தள்ளினம்... பேந்து காஸ்சிலிண்டர் வெடிக்கிறகதை...கோல்பேஸ் கதை... இப்ப பிள்ளைக் கடத்தல் ஒண்டையும் முழுசாய் முடிக்கயில்லை' எண்டார் மாஸ்ரர். 'ஒண்டை மட்டும் விடாமலுக்குக் கதைக்கிறமல்லே? அததான் உந்தப் போதைப்பொருள்க் கதை' எண்டு சிரிச்சார் முருகேசர்.

'அதுகும் இல்லையெண்டால்...மறந்து போச்செண்டால் வேறையென்னத்தைத்தான் கதைக்கிறது? காணிப் பிரச்சனை விகாரைப் பிரச்சனை பொருளாதாரப் பிரச்சனையெண்டு விசரல்லெ பிடிக்கும்'எண்டு கனகர் சொல்ல 'கதையளை மாத்திற கதையள்தான் எல்லாருக்கும் நல்லாச் சோறு போடுதுபாருங்கோ... அதுகளும் இல்லையெண்டால் இந்தப் புழுக்கத்துக்கை பொழுதுபோகுமே?' எண்டுகொண்டு எழும்பி வீட்டை வந்திட்டன்.

# மீட்டல்...

12

துன்பானந்த சுவாமி

சுவை, மணம், விலை என நாம் கொடுக்கிற முக்கியத்துவத்தை அதன் போசணை விடயத்தில் கவனமெடுக்க முடியாதவர்களாக மாறிவிட்டோம் அல்லது மாற்றப்பட்டு விட்டோம். பாரம்பரிய உணவுகளைத் தவற விட்டு வருகிறோம். பாரம்பரிய உணவுகளது பெறுமானங்கள் என்ன? அவற்றினது முக்கியத்துவங்கள் என்ன? அவற்றினது சிறப்பியல்புகள் என்ன? எப்போதாவது சிந்தித்துள்ளோமா?

எமது உணவுகளுக்கான தரத்தை உயர்த்துவதாக எண்ணுகின்ற அளவிற்கு அதனது போசணையினது பெறுமானம் பற்றியதாக கவனமெடுப்பது மிகக்குறைவு. போசணையை உயர்த்துதல் என்பது சேர்க்கிற கறி வகைகளிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது. நாம் அதனைக் கவனத்தில்



கொள்வதைவிட மணம், சுவை, நிறம் என்பவற்றிலேயே எமது கவனத்தை நிறுத்திவிடுகிறோம்.

துணையுணவுகள் அதாவது கறிவகைகள் இயற்கையாகவே சுவை,மணம், நிறம் என்கிற தனித்துவங்களுடன்தான் உள்ளன. அவற்றை மெருகூட்ட இயற்கையான சுவைச் சரக்குகள் ஏராளமுண்டு என்பதை வசதிகருதி மறந்துவிடுகிறோம் என்பதை கடந்த பகுதிகளில் பேசியிருக்கிறோமல்லவா? இங்கே பேச முயல்வது அதுவல்ல. கறிவகைகளில் நாம் செலுத்தும் கவனம் போதாது

அல்லது இல்லை என்பது பற்றியது தான்.

அன்றைய காலத்தில் அறுசுவை என்று விசேடமாக குறிப்பிட்ட அதற்கதற்கான துணையுணவுப் பொருட்களைப் பயன்படுத்தியிருந்தோம். அதில் முக்கியமானவை மரக்கறி வகைகள். அதில் காய், கனி.கிழங்கு, இலை, பூ, விதை என தாவரங்களது பெறுதிகளாக இயற்கைப் பொருட்களாக இருந்தன. அவை இயற்கை யாகவே விளைந்தவையாக இயற்கை முறைகளிலேயே பதப்படுத்தியவையாக இருந்தன. அசேதன அதாவது செயற்கையான கேடுவிளைவிக்கக் கூடிய பதார்த்தங்கள் சேராதவையாகவே இருந்தன.

**கறுத்தக்கொழும்பான் என்கிற எமதேயான அடையாளமான மா மரங்கள் ஆடம்பர அழகுக்காகத் தறிக்கப்பட்ட விட்டன. தப்பி நிற்பவைகூடக் காய்ப்பதை குறைத்த விட்டன**

பொருட்கள் இயற்கையாக இருக் கக்கூடிய வாய்ப்புகள் தற்போது அரிதாகிவிட்டன. அதனைவிட குறித்த போசணைப் பெறுமதிக்காக குறிப்பிட்ட மரக்கறி என்கிறதும் அதனது அளவு எவ்வளவாக இருக்கவேண்டும் என்பதும் அதற்குச் செர்த்துப் பெறுமதிசேர்க்கவேண்டிய பதார்த்தங்கள் எவையெவை என்பதும் தற்போததைய காலத்தில் கவனிக்கப்படுவது மிகக்குறைவு அல்லது இல்லையென்கிற நிலையிலேயே உள்ளது.



அவ்வகையான இயற்கை மரக்கறி வகைகள் கிடைப்பது அரிதாகிவிட்டதென்பதும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டியதாகி விட்டது. காரணம் அவ்வகைப்பட்டவற்றை உற்பத்திசெய்வது அருகிவிட்டது. குறிப்பாக எமது பிரதேசம் சார்ந்து விளையக்கூடிய அவற்றை நாம் நுகர்வதில் காட்டும் தயக்கம் உற்பத்தியாளனது சந்தை வாய்ப்பை தொலைத்துவிட்டது. மறுபுறம் நாகரீக மோகம் அவ்வாறான பண்டங்களை நுகர்வதை கௌரவக் குறைவானதாக ஆக்கிவிட்டது. அறியாமையும் நிறையவே காரணமாகிவிட்டது.

எமது பாரம்பரியமான தாவரங்களது ஆரோக்கியத்தையும் பெருக்கத்தையும் அழித்துவிட்டோம். எமது பாரம்பரிய தாவர வர்க்கங்களது வளர்ச்சி வேகம் விளைவினது அளவு தோற்றப்பொலிவு போன்றவற்றை போதாமையுள்ளவையாகப் பார்க்கிற மனோநிலை உருவாக்கப்பட்டு விட்டது. மாற்றீடாக மரபணு மாற் றங்களுக்குள்ளாக்கப்பட்ட தாவர வர்க்கங்கள் நாம் குறையுள்ளதாகக் கருதிய அத்தனை விடயங்களும் நிறைவாக இருப்பதான தோற்றப் பாட்டை கொண்டிருக்கின்றன. இவற்றுக்கான விளம்பரங்களும் சிபாரிசுகளும் மிகமிக அதிகமானது என்பதுதான் உண்மை.

உற்பத்தியாளனுக்கான வரு வாயை மரபணு மாற்றப்பட்ட தாவரங்கள் குறுகிய காலத்துள் அதிகளவான அறுவடையினூடாக வழங்குகின்றன என்கிற ஒரே காரணத்தால் அவைபெரிதும் பரவலாக்கப்பட்டு விட்டன. இங்கும் அறிவாளிகளாக நாம் கருதிக்கொள்கிற ஒரு வர்க்கத்தினது சிபாரிசுக்களும் ஊக்கப்படுத்துதல்களும் மரபணு மாற்றத் தாவரங்களுக்கான பயன் பாட்டை பெருக்கியுள்ளது. இவ் வகைப் பட்ட தாவரங்களது வளர்ப்பு எமதுபாரம்பரிய தாவரங்களது வளர்ச்சிக்கும் பரவலுக்கும் பெருத்த அச்சுறுத்தலாகி விட்டது.

பாரம்பரிய தாவரங்களுக்கு கேள்வியில்லாமலாகி விட்டது என்பது ஒருபுறம் அதிகளவான புதிய நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகிவிட்டன என்பது மறுபுறம். கறுத்தக்கொழும்பான் என்கிற எமதேயான அடையாள மான மா மரங்கள் ஆடம்பர அழகுக்காகத் தறிக்கப்பட்ட விட்டன. தப்பி நிற்பவைகூடக் காய்ப்பதை குறைத்த விட்டன அல்லது நிறுத்திவிட்டன. காரணம் அறி முகப்படுத்தப்பட்ட மரபணு மாற்றப்பட்ட மாமர இனங்க ளோட வந்த நோய்கள்.


அந்த வகையில்தான் எமது முருங்கைக்கும் ஆகியிருக்கிறது. பேசுவதற்கு ஏராளமுண்டு. பேசுவோம்.

ஜேம்ஸ் ரி.இரத்தினம்

# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)

10




டச்சுக்காரர்களினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட சிங்கள - தமிழ் ஒற்றரைக் கைது செய்த பிரித்தானிய இராணுவம் அவரை இராணுவத் தலைவர் மேஜர் ஜெனரல் ஸ்டுவேர்ட் முன் நிறுத்தினர். எல்லா ஒற்றர்களுக்கும் வழமையாகிப்போன பயங்கர விளையாட்டை விளையாட தம்பி முதலி இந்தச் சந்தர்ப்பத்தில் தீர்மானித்தார். ஆனால் அவ்விளையாட்டில் அவர் தோல்வியுற்றார். தண்டனை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. தம்பி முதலியைச் சிரச்சேதம் செய்ய உத்தரவிடப்பட்டது. தம்பி முதலிக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றுவதைவிட மாற்று வழியேதும் ஸ்டூவர்ட்டுக்கு இருக்கவில்லை. இந்த இடத்தில் ஏதோ ஒரு தலையீடு ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எந்தவிதமான பயங்கர வேலையையும் மிகத் திறமையாகச் செய்து முடிக்கக் கூடியவராகையால் தூக்குக் கயிறு கழுத்தை இறுக்கவில்லை என்பது எனது கருத்தாகும்.

சிலோன் கெஸட் பத்திரிகையில் வெளிவந்த விவரங்களுக்கு அமைய டச்சுக்காரர்களுக்கு எதிராக வேவு பார்ப்பதற்காகத் தம்பி முதலி அமர்த்தப்பட்டார். டச்சுப் படையணியின் வீரர்களின் எண்ணிக்கை, கோட்டையைப் பாதுகாப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் படையணி பற்றிய சகல விவரங்களும் அவரிடம் எதிர்பார்க்கப்பட்டன.

ஒற்றர்களின் நடைமுறைகளுக்கு முற்றிலும் மாறான அவ்வேண்டுகோளை அவர் முழுமையாக நிராகரித்தார். மனச்சாட்சிக்கு மாறாக நாட்டைக் கருத்தில் கொள்ளாது (அவருக்கு நாடு ஒன்று இருந்திருக்குமானால்) சுயலாபத்துக்காக வேவு பார்க்கும் ஒற்றனின் நிலைக்கு ஆளாவதற்கு அவர் விரும்பவில்லை. அவர் அவ்வாறான துரோகமான வேலையைச் செய்ய மாட்டார் என அவரின் சரிதையை எழுதிய எழுத்தாளர் எடுத்துக்காட்டுவது, உயர் குணாதிசயங்கள் நிறைந்த இம்மனிதர் அவ்வாறான இழிவான காரியத்தைச் செய்யமாட்டார் என நமக்கு எடுத்துரைப்பதற்காகவே.

எவ்வாறாயினும், பிரித்தானிய ஒற்றர் சேவையைவிடத் தனது தரத்தை உயர்த்திக்கொள்ளச் சாத்தியமானதால் அவருடைய உயிIரைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. தம்பி முதலிக்கு விதிக்கப்பட்ட தண்டனை இவ்வாறு எதிர்காலத் தலைமுறைக்காக ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக நமக்குப் பரிசாக வழங்கப்பட்டது (அல்லது தண்டனையாகத் தரப்பட்டுள்ளது) அவரது பரம்பரையினரான ஜூனியஸ் ரிச்சார்ட் ஜெயவர்த்தன ஆவார். அவருக்கு உரிய தலைவிதி அன்று தீர்மானிக்கப்பட்டிருந்தால், உண்மையான நாட்டுப்பற்றாளர்களான கண்டிப் பிரபுக்கள் பலரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். அது மட்டுமல்லாது அவருடைய மனச்சாட்சியும் (அவருக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருந்திருக்குமானால்) இரத்தத்தால் அசுத்தமடையாது இருந்திருக்கும் என்பதோடு அவருடைய வழிவந்தோரும் அசுத்தமடையாது இருந்திருப்பர். உண்மையில் அவ்வாறு நிகழ்ந்திருந்தால் இலங்கையின் வரலாறு முற்றிலும் வேறுவிதமாக அமைந்திருக்கவும் கூடும். தீர்மானித்தபடியே தம்பி முதலியின் வாழ்க்கை தூக்குமரத்தில் முடிவுற்றிருக்குமானால், இலங்கை வரலாற்றில் துரோகம் சம்பந்தமான வம்சக் கதை பிறந்த இடத்திலேயே செத்திருக்கும் என்பது மட்டுமல்லாது பிலிமத்தலாவை, எஹெலப்பொல போன்றோர் குறித்து நமக்குக் கேள்விப்பட்டிருக்கக்கூடக் கிடைத்திருக்காது.

தொன் ஆட்ரியன் விஜேசிங்க ஜெயவர்த்தன எனப் பெருமையுடன் பேசப்படும் தம்பி முதலியின் பிற்கால வரலாறு இலங்கையர் பெருமைப்படக்கூடிய ஒன்றல்ல. ஒரு வகையில் தம்பி முதலியின் பிற்கால வரலாறு இலங்கை வரலாற்றைச் சேர்ந்ததல்ல. அது பிரித்தானிய வரலாற்றுக்கு உரியதாகும். நிரந்தரமான மொழி, நிரந்தர மதம், நிரந்தர உடை, நிரந்தர இனமின்றி அலைந்து திரிந்த பாபிஷ்டனின் வீர தீரச் செயல்களுக்காகப் பிரித்தானிய ஒற்றர் சேவையின் வரலாற்றில் இடம் ஒதுக்கத்தான் வேண்டும்.

ஒற்றர் சேவை ஒருபோதும் உயர் தொழிலாகக் கருதப்பட்ட ஒன்றல்ல. தனது நாட்டுக்காக வேவு பார்க்கும் பணியில் ஈடுபடுதல் ஒருவேளை நியாயமானதாகக் கருதப்படலாம். எனினும் தனது நாட்டுக்கு எதிராக வேவு பார்த்தல் மிக அருவருப்பான - நீசத்தனமான செயலாகும். அவ்வாறான ஓர் ஒற்றன் அனுக்கிரகத்தை இழப்பதுமின்றி, அவனால் பாதிப்புக்குள்ளானவர்களின் வழிவந்தவர்கள், அவ் ஒற்றனின் பரம்பரையினரைச் சபிப்பதும் தவிர்க்க முடியாததே.

ஆண்டுதோறும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காகச் சுதந்திர சதுக்கத்துக்கு வருகைதரும் நாட்டுப்பற்றாளர்கள் தம்பி முதலியின் கொடும்பாவியினை எரிக்கும் நடைமுறை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். வரலாற்றில் தம்பி முதலிக்கு உரிய கௌரவம் அதுவே ஆகும்.

1950மே மாதம் 15ஆம் திகதி டைம் ஒவ் சிலோன் பத்திரிகைளில் வெளிவந்த வின்சன்ட் த சில்வா என்பவர் எழுதிய கட்டுரையின் இறுதிப் பகுதியை இங்கு பிரசுரிப்பது பொருத்தமானது. பிரித்தானியருக்கு இவ்வளவு கீழ்ப்படிவுடன் நடந்து கொண்ட இன்னொரு சிங்கள ஊழியரைக் காண்பது அரிதாகும். அதே போன்று சிங்களவர்களுக்கு அவரைப்போன்று துரோகம் செய்வதவர் களும் வேறு எவரும் இல்லை. முன் னர் துரோகிகள் என்று பிரசித்திபெற்ற பிலிமத்தலாவை, எஹெலப்பொல போன்றவர்கள் இழந்துபோன சிங் கள அரசை மீண்டும் நிறுவுவதற்காகப் பிழையான வழியில் சென்றவர்களாவர். எனினும் ஆட்ரியன் ஜெயவர்தன செயற்பட்டது வெறுமனே தனது வயிறு வளர்ப்பதற்காகவே.

தம்பி முதலியின் கதை ஒவ்வொரு இலங்கையர்களும் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம் என்பதுடன் அது எச்சரிக்கையுமாகும். அவருடைய பரம்பரையில் வந்த அவருடைய பேரன் முறையான ஜூனியஸ் ரிச்சார்ட் ஜெயவர்த்தன தற்போது அச்சுறுத்தும் பாணியில் நெருப்புடன் விளையாடுவதனாலேயே இது விசேடமான எச்சரிக்கை ஆகின்றது. சிலவேளை அந்த நெருப்பிலேயே அவர் கருகிப் போகலாம் என்பதும் அவருக்குத் தெரியாதிருக்கலாம். அவர் அரசுக்கு எதிராகச் சிவில் சட்டங்களை மீறும் இயக்கத்தைக் கொண்டு நடத்தப்போவதாக அறிவித்துள்ளார். ஆனால், அவர் ஒன்றைச் சொல்லி நாளை வேறொன்றைச் செய்யும் மனிதர். தன்னுணர்வுடைய எவரும் இந்த மனிதரைப் பின்பற்ற விரைவுகொள்ளப் போவதில்லை.

**ஒற்றர் சேவை ஒருபோதும் உயர் தொழிலாகக் கருதப்பட்ட ஒன்றல்ல. தனது நாட்டுக்காக வேவு பார்க்கும் பணியில் ஈடுபடுதல் ஒருவேளை நியாயமானதாகக் கருதப்படலாம். எனினும் தனது நாட்டுக்கு எதிராக வேவு பார்த்தல் மிக அருவருப்பான - நீசத்தனமான செயலாகும்**

(மிகுதி அடுத்த வாரம்)

# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?




## மலக் கோப்பைக்குள் எந்நேரமும் ஏன் நீர்...?

உங்கள் வீட்டு மலசலகூடத்தின் மலக் கோப்பைக்குள் எந் நேரமும் நீர் தேங்கியிருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். ஆனாலும் அது உங்களின் சிந்தனையை ஒருபோதும் தூண்டுவ தில்லை. பாத்துப் பார்த் துப் பழகிப்போய்விட்டதாக வழமையா னதாக அதில் ஒரு புதினமும் இல்லையே என்பதாகக் கடக்கும் விடயமாக இருக்கிறது. அதற்குக் காரணமும் இருக்கிறது. மலசல கூடத்துக்குள் நுழையும் காரணம் மலம் கழிப்பதாக இருப்பதால் முழுக் கரிசனையும் அதிலேயே போய்விடுகிறது. மலம் கழித்த பின் கழுவிச் சுத்தப்படுத்திவிட்டு அவ்விடத்தை விட்டு விரை வாக அகலும் பண்பே பலருக்கும் இருப்பதால் இந்த நீர் தேங்கி யிருப்பது பற்றிச் சிந்திக்க நினைப்பதில்லை. அதைவிட மலக் குழிக்குள் நீர் ஊற்றிக் கழுவுவதும் நாமாகவே இருப்பதால் அந்த நீர் குறித்து அலட்டிக்கொள்வ தில்லை. எவ்வளவுதான் நீங்கள் நீரை வாரி ஊற்றினாலும், அடித்துக் கழுவினாலும் அந்தக் குழியிலி ருந்து அந்த நீர் அகலாமல் இருப்பதைக் காணலாம். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

மலக்குழிக்குள் மலத்தைக் கொண்டு சேர்க்கும் மாபிள் ஊடகத் தால் செய்யப்பட்ட மலக் கோப்பானது வடிவமைக்கப்பட்டிருக்கிற நுட்பம் காரணமாகவே அதன் முனைப்பகுதியில் எப்போதும் நீர் தேங்கியிருக்கிறது. அவ்வாறு நீர் தேங்கும் விதத்தில் அது அமைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், மலக்குழியிலிருந்து நேரடி யாக மணம் மற்றும் வாயுக்கள் அதன் வழியாக வெளியே வரா மல் தடுப்பதற்கே ஆகும். மலக்குழிக்குள் சேமிக்கப்படுகிற மலக் கலவை சேர்ந்து உருவாகும் வெப்ப வாயுக்கள் மற்றும் மணம் ஆகியவற்றைக் குறித்த பகுதி வழியாக வெளியேறாது விடாது தடுக்கின்ற தடையாகக் குறித்த பகுதியில் தேங்கியிருக்கும் நீர் செயலாற்றுகிறது. அதனால்தான் மலங்கழிப்போருக்கு எவ்வித அசௌகரி யமும் ஏற்படாமல் நிம்மதியாக மலம் கழிக்க முடிகிறது. இதைவிட அவ்விடத்தில் நீர் தேங்கியிருக்காவிடில் மல வாசனை, அந்த வாசனை யால் ஈர்க்கப்படும் ஈக்கள், இலையான்களின் போக்குவரத்து மார்க்கமா கவும் குறித்த பகுதி இருக்க வாய்ப்புகளுண்டு. இத்தகைய காரணங்க ளாலேயே மலக் கோப்பையில் எந்நேரமும் நீர் தேக்கி வைக்கப்பட்டி ருக்கிறது. அந்தச் சிறு உத்தியானது பெரும் பாதுகாப்பு மார்க்கமாகவும் ஆராக்கிய ஊக்கியாகவும் இருக்கிறது என்பதுதான் உண்மை.

# பார்க்கத்தான் அழகு ஆனால் பயங்கர விஷம்...!

பிரதீபா



சிறு வயதில் கண்களைக் கொள்ளை கொண்ட விளையாட்டுப் பொருள்களில் ஒன்று குண்டுமணி. குண்டுமணிகளைப் பொறுக்கியெடுத்துச் சேகரித்து அவற்றைச் சித்திரக் கொப்பிகளில் ஒட்டி உருவங்கள் ஆக்கி மகிழாதவர்கள் இருக்க முடியாது என்று சொல்லுமளவுக்குப் பலரின் சிறுபராயத்தைக் குண்டுமணி கிறங்கடித்திருக்கும். பளிச்சிடும் சிவப்பு - கறுப்பு வர்ணங்களால் இயற்கையாக உருவாகிய குண்டுமணியால் ஈர்க்கப்படாத சிறுவர்கள் இல்லை எனலாம். அதன் வர்ணமும் பளிச்சிடும் இயல்பும் சிறிய உருண்டை உருவமும் எனக் குண்டுமணி சிறுவர்களைக் கவர்ந்திழுக்கத் தவறவில்லை. குண்டுமணிகளைச் சேகரித்து உருவங்கள் ஒட்டி ஆக்குவது மாத்திரமல்ல, கண்ணாடிப் போத்தல்களுக்குள் சேகரித்து அழகுப் பொருளாக்கி மகிழ்வது, மண் விளையாட்டின் போது சமையல் பொருள்போல பாவனை செய்வது, இணைத்து உருவங்கள் ஆக்குவது எனக் குண்டுமணியின் அழகால் அதைப் பல விளையாட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவார்கள் சிறார்கள். குண்டுமணியை விளையாட்டுப்பொருளாக மாத்திரம்தான் பயன்படுத்துவார்களா என்றால் அதுதான் இல்லை. அதன் அழகும் வசீகரமும் அதை ஒரு சுவை மிகுந்த தின்பண்டமாகச் சிறுவர்களைச் சிந்திக்க வைக்கவும் தவறுவதில்லை. ஆனால், அது பொல்லாத நஞ்சுப் பொருள் என்று தாய்மார், வீட்டிலுள்ள பெரியவர்கள் இடித்துரைப்பதைக் காணலாம். அதிலும் குறிப்பாகக் குழந்தைகளின் கைகளில் குண்டுமணியைக் கண்டால் மிகக் கவனமாகப் பார்த்திருப்பதும், இறுக்கமாக அறிவுரை சொல்வதையும் சிலவேளைகளில் அவர்களின் கைகளில் இருந்து குண்டுமணிகளை அப்புறப்படுத்துவதில் கரிசனை காட்டுவதையும் காணலாம்.

**குண்டுமணியின் தேவை**

ஒரு செடியின் விதையாக... அதுவும் பொல்லாத விசமாக இருந்தாலும் அழகும் வசீகரமும் காரணமாகக் குண்டுமணி பல தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. சில பகுதிகளில் குண்டுமணிகளை அணிகலன்கள் செய்வதற்குப் பயன்படுத்துகின்றனர். மரபு வழியாக நகைத்தொழில் செய்வோர் தங்கத்தின் நிறையை அளவிடுவதற்குக் குன்றிமணிகளைப் பயன்படுத்துவதுண்டு. சீனாவில் இவ்விதை காதலின் சின்னமாகக் கருதப்படுகிறது. அதைவிட இந்தியாவில் பல மாநிலங்களில் கொடிய - அச்சுறுத்தலான விலங்குகளைக் கொல்லும் விசமாக இதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இவ்வாறாக நாம் சிறுவயதில் விளையாடிய குண்டுமணியைப் பலர் பல தேவைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள்.

**முதற்தர விஷம்**

குன்றுமணி என்பது குன்றிச் செடியில் விளையும் வித்தாகும். இந்தக்



# 2018 [அனைவரும் நாயகர்களே]

சிறந்த திரைப் பதிவு

அண்மையில் வெளியாகிய மலையாளத் திரைப்படம் '2018' (Everyone is a Hero). 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவின் கேரள மாநிலத்தில் பெய்த அடை மழையையும் அதனால் உண்டான பாதிப்புகளையும் அதை எதிர்கொண்ட மக்களின் மன உறுதியையும், வலிகளையும் பேசுகிறது படம். இதுபோன்ற பேரிடர் காலத்தில், சிறுசிறு உதவி களைச் செய்யும் ஒவ்வொருவரும் நாயகர்கள்தான் என்கிறது படம்.

**கதை**

அருவிக்குளம் கிராமத்தில் மழைக்கும் முன் கூடும் கரு மேகங்ளுடன் தொடங்குகிறது படம். சிறுகச் சிறுக மழை பெய்யத் தொடங்குகிறது. பாத்திரங்கள் ஒவ்வொன்றும் வெள;வேறு வாழ் வியல் பின்னணியோடு அறிமுகமாகின்றன. போலி மருத்துவச் சான்றிதழ் கொடுத்துப் படைப்பிரிவில் இருந்து வெளியேறிய இளைஞன், வறட்சியால் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாடுகளையும் கேரள பெருமழை பாதிப்புகளையும் தொடர்ந்து பதிவு செய்து வரும் பெண் செய்தியாளர், வெளிநாட்டுக்கு வேலைக்குச் சென்ற கணவனுக்கும் கேரளத்தில் வசிக்கும் அவரது மனைவிக்கும் இடையிலான உரசல்கள், பணி முடிந்து வீடு திரும்பும் நேரத்தில் பேரிடர் கால கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படும் அரச அலுவலர் அவரது பணிச்சூழலை புரிந்துகொள்ளும் அவரது

குன்றிச் செடியானது கொடித் தாவரமாக வளர்வதைக் காணலாம். கடுமையான சிவப்பு நிறத்திலுள்ள குண்டுமணியில் கறுப்பு நிறப்புள்ளி காணப்படும். இந்த விதையே குண்டுமணி. கவர்ச்சியான இந்த விதை மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்தது. ஆனாலோ இதன் தோல் மிகவும் கடினமானது. உள்ளேதான் அந்த விசம் இருப்பதால் இதைச் சிறுவர்கள் அப்படியே முழுதாக விழுங்கினால் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆனால், அதன் மீதான விருப்பால் அதைச் சப்பி அரைத்துவிட்டு விழுங்கிவிடுவார்கள் ஆனால், அப்போதுதான் பெரும் ஆபத்தே இருக்கிறது. அப்படியே விழுங்கினால் குடலுக்குள்கூட அரைக் கப்படமுடியாத அந்த விதையால் ஆபத்துகள் நேராது என்பதுதான் படைப்பின் இயற்கை விதியாக இருக்கிறது. அது மாத்திரமல்ல குண்டுமணியை எரிப்பதால் கூடப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதில் இருந்து எழும் புகையைச் சுவாசிப்பதால்கூட நரம்பியல் சம்பந்தப்பட்ட சில நோய்கள் ஏற்படுகின்றன. ஆனாலும்கூடக் குண்டுமணியிலிருப்பது அதிக விஷம்தான். குண்டுமணியில் உள்ள நஞ்சை ஆப்ரின் (ABRIN) என்கிறார்கள். தாவரங்களில் - வித்துகளில் உள்ள விஷங்களிலேயே மிகவும் கொடியதும் முதன்மையிடத்தைப் பிடிப்பதும் இந்த விஷம்தான் என்றால் பாருங்களேன்...!





மனைவியும் குழந்தையும், மீனவ குடும்பத்தில் பிறந்து செமாடலிங் துறைக்குச் செல்லத் துடிக்கும் இளைஞனும் அவனது காதலும், மீனவராக இருப்பதால் அவரது காதலுக்கு வந்த பிரச்சினை, தமிழகத்திலிருந்து கேரளாவுக்குச் சுமை ஏற்றிச் செல்லும் லொறி ஓட்டுநரும் அவரது வாழ்வியல் சூழலும், மழைக் காலம் எனத் தெரியாமல் கேரளாவுக்கு வரும் போலந்து நாட்டைச் சேர்ந்த தம்பதிகளும் அவர்களது கைடான கார் ஓட்டுநரும் எனப் பலரது வாழ்க்கையில் பெருமழையால் வாழ்வில் ஏற்பட்ட திருப்பங்களும், தாக்கங்களும் தான் படத்தின் திரைக்கதை.

அகில் பி.தர்மஜனுடன் இணைந்து எழுதி, ஜுட் ஆன்டனி ஜோசப் இயக்கியிருக்கும் படம் இது. பேரிடர் குறித்த திரைப்படம் என்பதற்காக இழப்புகள் குறித்து மட்டும் பதிவு செய்யாமல் அந்தக் கையறு நிலையில் சாதி, மதம், மொழி, இனம் கடந்து உதவி செய்ய முன்வரும் நாயகர்கள் குறித்துப் பேசுகிறது. பேரிடர் சூழலில் ஒவ்வொருவரும் பிறருக்கு உதவ முன்வர வேண்டியதன் அவசியத்தையும் கற்றுக் கொடுத்திருக்கிறது.

ஒவ்வொருவரது தனிப்பட்ட வாழ்க்கையில், குடும்பப் பிரச்சினைகள், காதல் பிரச்சினைகள், மதிப்பு - மரியாதைப் பிரச்சினைகள், தன்முனைப்புப் பிரச்சினைகள் என எத்தனையோ பிரச்சினைகள் இருந்தாலும் ஒரு பேரிடர் இவர்கள் அனைவரையும் எப்படி ஒரே குடையின்கீழ் கொண்டு வருகிறது என்பதை நேர்த்தியாக காட்சிப்படுத்தும் இயக்குநர் ஜுட் ஆன்டனி ஜோசப், தனது கதாப்பாத்திரங்களின் வழியே பார்வையாளர்களின் மனங்களில், மனிதநேயத்தின் தேவையை ஆழப் பதித்திருக்கிறார்.

2018 ஆகஸ்ட் மாதத்தின் மத்தியில் பெருமழை வெள்ளம் வழிந்தோடிய தடங்கள் தோறும் அழுந்தப் பொதிந்திருந்தன அழுகுரல்கள். விழுந்துகிடந்த கட்டட இடுபாடுகளின் சுவர்கள் சரிந்து சாய்ந்து மனித உடல்களின் மீது ஓய்வெடுத்தன. வீட்டு உபயோகப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாமல் அணைகட்டி நின்றன நீர்வழிகள்.

இப்படி அந்த பெருமழை, கேரளாவைக் கலைத்துப் போட்டிருந்தது அந்தச்சமயத்தில் அந்தப் பகுதி மீனவர்கள் பலர் அரசுடன் இணைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். ஆர்ப்பரிக்கும் அரபிக் கடலின் பேரலைக் கும், குறுக்கும் நெடுக்குமாகப் பாயும் கேரளத்து ஆறுகளின் ஆழத்துக்கும் பழகிய படகுகள் தார்ச்சாலை வீதிகளில் நகர்வலம் வந்தன. உயிருக்கு ஆபத்தான நிலையிலும், வெள்ளத்தில் சிக்கித் தவித்தவர்களையும் மீனவர்கள் பத்திரமாக மீட்டனர். அத்தகைய பேருதவி தருணங்களை நன்றியோடு நினைவுகூர்கிறது இத்திரைப் படம்.

மீனவ சமூக இளைஞனைக் காதலிக்கும் பெண்ணின் தந்தை ஒருவர், பெண் கேட்டு வீட்டிற்கு வந்த மீனவ குடும்பத்தினரைப் பார்த்து எழுப்பும் கேள்விகள் ஆழ் கடலில் இறக்கப்படும் நங்கூரத்தைவிட கனமானவை. இதற்குப் பதிலளிக்கும் விதமாக அடுத்துவரும் காட்சி யில் மீனவ குடும்பத்தைச் சேர்ந்த பெண் கதாபாத்திரம் பேசும் வசனங்கள் பார்வையாளர்கள் மனதில் இடிபோல் இறங்குகின்றன. பேரிடருக்கும் பெருமழைக்கும் சாதி, மதம், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இருப்பது இல்லை. ஒரேநாள் அனைத்தையுமே தலைகீழாக புரட் டிப்போட்டிவிடும் என்பதை மழை வெள்ளத்தில் சிக்கிய அப்பெண்ணின் குடும்பம் ஒரு மீனவப் படகில் மீட்கப்படும் காட்சியின் வழியே கடத்தியி ருக்கிறார் இயக்குநர்.

தொடர் மழை நாட்களில் அனைவரையும் போல இந்தக் கதாபாத்திரங்களும் அவரவர் வாழ் வியல் சூழலுக்கேற்பத்தான் மழையை எதிர்கொள் கின்றனர். தொடர் மழை அடித்து பெய்யத் தொடங்குகிறது. அது பெருமழை யாகி, வெள்ளப் பெருக்காகி, பேரிடராக உருமாறும் தருணத் தில் இந்த அனைத்து கதாப்பாத்தி ரங்களும் ஒருவருக் கொருவர் இணக்கமாகி இறங்கி வந்து உதவிக்கரம் நீட்டும்போது நனை ந்து போகிறது பார்வையாளர்க ளின் மனது.

பேருந்தின் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து பய ணிக்கும் நாயகி, மழை முழுவதையும் கைக்குடையில் தடுத்துக் கடக்க முயற்சிக்கும் மனிதர்கள், கடல், மீனவர் கள், குடையுடன் மழையில் காதலியோடு செல்போனில் கரையும் உரையாடல்கள், வெள்ள நேரத்தில் வீட்டுக்குள் தஞ்சமடையும் ஊர்வன என படம் முழுக்க சின்னச் சின்ன சுவாரஸ்யங்கள் ஏராளம்.

படத்தின் முதல்பாதியில் புயலுக்கு முன் நிலவும் அமைதி போல் அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள திரைமொழி பார்வையாளர்களின் கருவிழிப் படலத்தை இடைவெளியின்றி ஆக்கிரமித்துக் கொள்கின்றன. இரண்டாம் பாதியில் குறிப்பாக வெள்ள மீட்பு காட்சி களில் ஒருசில சினிமாத்தனமானங்கள் தென்பட்டாலும் அவை பெரிதாக உறுத்தவில்லை. பார்வையற்றவராக வந்து படம் பார்க்க வந்த அத்தனை கண்களையும் அபகரித்துக் கொள்கிறார் இந்திரன்ஸ்.

அதுபோல் ஆண்கள் மட்டுமே பேரிடர் காலத்தில் பெரும்பாலான உதவிகளை செய்யக்கூடிய பலம் பொருந் தியவர்கள் என்பதை இப்படம் நிறுவுகிறது. உண்மை அதுவல்ல, ஆண்களைவிடவும் அதிகமான பணிகளை அத்தகைய தருணங்களில் செய்யும் ஆற்றல் படைத் தவர்கள் பெண்கள். படத்தில் வரும் பல பெண் கதாப் பாத்திரங்கள் ஆண்களையேச் சார்ந்திருக்கிறது.



**கதாபாத்திரங்கள்**

டொவினோ தோமஸ், இந்திரன்ஸ் ,அபர்ணா பால முரளி, வினீத் சீனிவாசன், குஞ்சாக்கோ போபன், லால், நரேன், ஆசீப் அலி, தன்வி ராம், ஷிவதா, கலையரசன் என படத்தில் இன்னும் பலருடன் சேர்ந்து, படம் முழு க்க மழை, இடி, வெள்ளத்தையும் முதன்மை பாத்தி ரங்களாக்கி கதை சொல்லியிருக்கிறார் இயக்குநர். மையப் புள்ளியிலிருந்து விலகாமல் செல் லும் படத்தின் கதையோட்டம் படம் முழுக்க பார்வை யாளர்களை ஒன்றிக்க வைத்திருக்கிறது.

**இசை, ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு**

நோபின் போலின் இசை, அகில் ஜார்ஜின் ஒளிப்பதிவு, சாமன் சாக்கோவின் எடிட்டிங் ஒரு பேரிடரை நேரில் சந்திக்கும் அனுபவத்தைக் கொடுக்கின்றன. கருமேகக் கூட்டங்கள், மழை விழும்போது கடந்து செல்லும்

அதேபோல் முல்லைப்பெரியாறில் இருந்து தண்ணீர் திறக்காததால் வறட்சியில் வாடும் தமிழக கிராமத்தையும் குடிநீருக்கான போராட்டத்தையும் காட்டிவிட்டு, கேரள அணையை உடைக்க வெடிபொருளை எடுத்துச் செல்லும் லொறி ஓட்டுநராகத் தமிழரை காட்டுவது நெரு டல். அதுவும் நிவாரணப் பொருட்கள் கொண்டு செல் லும் லொறியில் வெடி பொருளை எடுத்துவருவது, 2018 பேரிடரின் போது ஓடோடி வந்து உதவிய தமிழ்நாட்டு மக்களின் பேரன்பை இதைவிட கொச்சைப்படுத்திவிட முடியாது என்பதற்கு சமமான கற்பனை அந்த காட்சி. 2018இல் ஒரு மாநிலத்தில் நிகழ்ந்த பெருந்துயரை பதிவு செய்யும்போது அயல் மாநிலம் குறித்து என்ன மாதிரியான புரிதலை ஏற்படுத்துகிறோம் என்பதில் கவ

னம் தேவை. இந்த அபத்தங்களை எல்லாம் தவிர்த்து விட்டுப் பார்த்தால், '2018' உண்மையில் ஆகச் சிறந்த பதிவு.

2018 பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்திலும், நிலச்சரிவுகளிலும் சிக்கி 483 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் பாதுகாப் பான இடங்களில் தங்கவைக்கப்பட்டனர். பலர் மாயமா கினர். இடியுடன் தொடங்கிய படம், படம் முழுக்க பெய்தொழுகி மழை நின்ற நாளில் முடிந்திருந்தாலும், பார்வையாளர்கள் மனதில் பெருமழையின் ஈரத்தை மீண்டும் பரவச்செய்திருக்கிறார் இயக்குநர்.



# தூக்கு

## இந்த வாரச் சொல்

தூக்கு என்ற சொல் யாழ்ப்பாணத் தமிழில் வினைச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டாலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அதன் அர்த்தம் வேறுபடுவதைக் காணலாம்.

"பிள்ளை அழுகுது ஓடிப்போய்த் தூக்கு"

"வீடு மாறும்போது எல்லாவற்றையும் தூக்கிப் பறிப்பது பெரிய கஸ்ரம்"

"சும்மாவே உன்னால் நடக்க முடியாது பிறகேன் இதுகளையும் தூக்கிக் கொண்டு போகிறாய்?"

"அவளின்ர பிள்ளை எப்ப போனாலும் தூக்குத் தூக்கு என்று அடம்பிடிக்கும்"

"பழு தூக்கும் போட்டியில் இந்தியாவுக்கு முதலிடம்"

"இந்தமுறை திருவிழாவுக்குத் தூக்குக் காவடிகள் அதிகம் வந்திருக்கு"

"அவன் அந்த மூட்டைகளை தூக்க ஏலாமல் தூக்கிக் கொண்டு போறான்"

"அவனுக்குச் சாமி தூக்கித்தான் கழுத்தில கழலை வந்தது"

இவற்றில் வரும் தூக்கு என்பது சுமையை, பாரத்தை அல்லது நபரைத் தூக்குவது எனும் அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது.

"அவனை ஆமிக்காரர்தான் தூக்கியிருக்க வேணும்"

"ஆளைத்தூக்கி அடி அடி எண்டு அடிச்சிப்போட்டுக் கொண்டுவந்து விட்டிருக்கிறாங்கள்"

இதில் வரும் தூக்குதல் என்பது ஆளைக் கடத்தியதைக் குறிக்கிறது.

"அவன் தற்கொலை செய்யவில்லையாம் யாரோ அடித்துத் தூக்கியிருக் கிறாங்களாம்"

"போன கிழமை ரெண்டு கைதிகளைத் தூக்கிப் போட்டாங்களாம்"

இவற்றில் வரும் தூக்கு என்பது கயிற்றில் கழுத்தை மாட்டித் தொங்கி உயிர்விடுவதைக் குறிக்கிறது.

"அவங்கள் மதில் கட்டேக்க தூக்குப் பாத்துத்தான் கட்டினவங்கள்" இதில் தூக்கு என்பது கட்டட வேலைக்குப் பயன்படும் உபகரணத்தைக் குறிக்கிறது.

"ஓர தூக்கு விறகு என்ன விலை"

இதில் தூக்கு என்பது நிறையை அளவிடும் அலகைக் குறிக்கிறது.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781